JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2 - Witness
for Prosecution

CC No. 98/2023 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 2 குப்புசாமி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 19.05.2026 | | | |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் சேவண்டிபுதூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி சசிகுமாரை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் (எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை) கடந்த 06.04.2023-ம் தேதியன்று காலை சுமார் 08.30 மணிளளவில் நானும், எனது அண்ணன் மகன் வீராசாமி என்பவரும் கந்தம்பாளையத்தில் உள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்திவிட்டு கல்பாவி வெங்கடாசல கவுண்டர் தோட்டம் அருகில் சென்று கொண்டிருந்த பொழுது, அங்கு வந்த எதிரி மது போதையில் எங்களை தகாத வார்த்தைகளால் திட்டினார். நாங்கள் எதற்காக எங்களை இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்ட பொழுது, அவர் கீழே கிடந்த உடைந்த கண்ணாடி பாட்டிலை எடுத்து என்னை வலது கண்ணுக்கு மேல் பகுதியிலும், தலையிலும் அடித்தார். எனக்கு இரத்தம் அதிகமாக வழிந்தது. எதிரி அடித்த பாட்டிலை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார்.

பின்னர் நான் பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் போலீசார்களிடம் சமாதானம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று கூறிவிட்டேன். சமாதானம் ஏற்படாததால், பின்னர் 10.04.2023-ம் தேதியன்று நான் பவானி காவல் நிலையம் சென்று மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.19 06:06:55 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதி இருக்கிறது என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நானும், வீராச்சாமியும் பொது தார் சாலையில் தான் உட்கார்ந்து மது அருந்தினோம் என்றால், சரியல்ல. நானும், வீராச்சாமியும் மது அருந்தி கொண்டிருக்கும்போது, சசிகுமார் அங்கு வந்தார் என்றால், சரியல்ல. அவர் அதற்கு முன்பே அங்கு தான் இருந்தார். நாங்கள் மது அருந்து கொண்டிருக்கும்போது சசிகுமார் அங்கு இருந்தார் என்றும், எங்களை அடித்து விட்டு சென்றார் என்றும் தான் போலீஸ் விசாரணையில் கூறினோம் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், நானும், வீராச்சாமியும் பொது தார் சாலையில் காலை 8:30 மணிக்கு மது அருந்திக் கொண்டிருந்தோம் என்றாலும், அதனை சசிகுமார் பொது இடத்தில் உட்கார்ந்து ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டார் என்றாலும், அதற்காக நான் சசிகுமார் மீது பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என் மீது தான் தவறு என்றாலும், எனது ஊரைச் சார்ந்தவர்கள் சமரசம் அதற்காகத்தான் பேசினார்கள் என்றாலும், அதனை மீறித்தான் நான் எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.19 06:07:01 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2 - Witness
for Prosecution

CC No. 98/2023 Crime No. Station

| Name | **PW. 2வீராச்சாமி** | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 19.05.2026 | | | |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் கல்பாவியில் குடியிருந்து கொண், கூலி வேலை செய்து வருகிறேன் . சசிகுமாரை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் (எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை) அ.சா.1 குப்புசாமி எனது சித்தப்பா ஆவார். கடந்த 06.04.2023ம் தேதியன்ற காலை சுமார் 08:30 மணியளவில் நானும், எனது சித்தப்பா அ.சா.1 குமாரசாமியும், வெங்கடாசல கவுண்டர் தோட்டத்திற்கு அருகில் மது அருந்திக் கொண்டிருந்தோம். அப்போது எதிரியும், அங்கு மது அருந்திக் கொண்டிருந்தார். எதிரி எனது சித்தப்பாவை தகாத வார்த்தைகளால் பேசினார். அதில் அவர்களுக்கு வாய் தகராறு ஏற்பட்டது. பின்னர் எதிரி அருகில் கிடந்த உடைந்த கண்ணாடி பாட்டிலை எடுத்து எனது சித்தப்பாவின் வலது கண்ணிற்கு மேல் அடித்துவிட்டார். அதில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது. எனது சித்தப்பாவிற்கு இரத்தம் வந்தவுடன் எதிரி அங்கிருந்து பாட்டிலை போட்டுவிட்டு ஓடிவிட்டார். பின்னர் நான் அவரை சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், வீராச்சாமியும் பொது ரோட்டில் உட்கார்ந்து தான் மது அருந்தினோம் என்றால், சரிதான். நாங்கள் மது அருந்திக் கொண்டிருக்கும்போதுதான் சசிகுமார் அங்கு வந்தார் என்றால், சரியல்ல. நாங்கள் மது அருந்திக் கொண்டிருக்கும்போது தான் சசிகுமார்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.05.19 06:07:06 +0530

அங்கு வந்தார் என்றால், சரியல்ல. அதற்கு முன்பே அவர் அங்குதான் இருந்தார். நான் போலீஸ் விசாரணையின் போது சசிகுமார் அங்கு தான் இருந்தார் என்று கூறினேன் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், நான் போலீசார் விசாரணையின் போது நானும், குப்புசாமியும் மது அருந்தி கொண்டிருக்கும்போது எதிரி அங்கு வந்தார் என்றும், தற்போது வழக்கிற்காக ஏற்கனவே சம்பவ இடத்தில் இருந்தார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நானும், குப்புசாமியும் பொது தார் சாலையில் காலை 8:30 மணிக்கு மது அருந்திக் கொண்டிருந்தோம் என்றாலும், அதனை சசிகுமார் பொது இடத்தில் உட்கார்ந்து ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டார் என்றாலும், அதற்காக நான் சசிகுமார் மீது பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எங்கள் மீது தான் தவறு என்பதாலும், எனது ஊரைச் சார்ந்தவர்கள் சமரசம் அதற்காகத்தான் பேசினார்கள் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.19 06:07:11 +0530

**Sd/- (J.RAJKUMAR)**
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-3 - Witness
for Prosecution

CC No. 98/2023 Crime No. Station

| Name | **PW. 3 கணபதி (எ) சேகர்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 19.05.2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு.355 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் சேவண்டியூரில் குடியிருந்து கொண்டு, டிராக்டர் ஓட்டும் வேலை செய்து வருகிறேன். நான் கல்பாவியில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன் . சசிகுமாரை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் (எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை) அ.சா.1 குப்புசாமி எனது சித்தப்பா ஆவார்.தேதி, மாதம் நினைவில்லை.

கடந்த 2-3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் நான் எங்கள் ஊர் டாஸ்மாக் பாரில் இருந்த பொழுது அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரி ஆகியோரும் அங்கு இருந்தார்கள். அனைவரும் மது அருந்தி கொண்டிருந்தபோது, எதிரிக்கும் அ.சா.1 க்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டது. எதிரி அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, பின்னர் அங்கு கிடைத்த உடைந்த பாட்டிலை எடுத்து அ.சா.1 ன் வலது கன்னத்திற்கு மேல் அடித்து விட்டார். அதில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது.

பின்னர் அவரை அங்கிருந்தவர்களின் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இந்த சம்பவத்திற்கு பிறகு 2-3 நாட்கள் கழித்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த போலீசார் என் முன்னிலையில் வரைபடம் வரைந்தார்கள். நான் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.19 06:07:17 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேற்படி விவரத்தை தான் போலீசார் விசாரணையின் போது சொன்னேன் என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்து தாளில் என்ன விவரம் எழுதி உள்ளது என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் எனது சித்தப்பா என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என் முன்னிலையில் எந்த ஒரு ஆவணமும் தயார் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.19 06:07:22 +0530

**Sd/– (J.RAJKUMAR)**
**Judicial Magistrate No.1, Bhavani**